TAMIL NADU LEGISLATURE
5 - MAY 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1972 சனவரி 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Crimes in Tamil Nadu

* 31 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government is aware of the report of the Home Ministry released about 4th May 1970, about the incidence of high percentage of crimes in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மத்திய அரசு வெளியிட்டுள்ள இந்தியாவில் குற்றம் 1968 என்ற சிறு வெளியீடு வந்துள்ளதை இந்த அரசு அறியும். இம்மாநிலத்தில் குற்றங்களின் சதவீதம் அதிகமாயிருந்ததாக அந்த வெளியீடு குறிப்பிடவில்லை.

Police Benevolent Fund

* 32 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Police Benevolent Fund has been increased from the year 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு காவலர் நல நிதியின் ஆண்டு மானியமான ரூ. 1 லட்சம் என்பது 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 1½ லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: காவலர்களின் ஜீவிய காலத்திலேயே அவர்களுக்கு ஏதாவது நெருக்கடி நிலை ஏற்படும்போது இந்த நிதி வழங்கப்படுமா?